பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 26 வியாழக்கிழமை 12.12.2019 கதிர் 37

இது ரகசியம் அல்ல!

'தன் வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.' – என் பார்கள்.

ஆனால் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரை 'தன்வினை' அல்ல, 'தன் புண்ணியம் தன்னைச் சுடும்' என்றாகி பக்கம் 02

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்வதற்கு ஆணைக்குழு அமைப்பதா?



## ஞானசாராின் யோசனைக்கு எதிர்ப்பு கைதிகளுக்கான அமைப்பு தெரிவிப்பு

ஹட்டன், டிசெ.12

அரசியல் கைதிகள் விடுதலை குறித்து ஆராய் வதற்கு ஆணைக்குழு அமைப்பது காலத்தை இழுத்தடிக்கின்ற ஒரு செயலாகவே இருக்கும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட் தந்தை சக்திவேல் தெரிவித்தார். பக்கம் 03

## தமிழாக்கம் செய்யப்படும் மஹாவம்சம்!



கொழும்பு, டிசெ. 12

மஹாவம்சம் தமிழ், ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான பணிகளை முன்னெடுப் பதற்கு மஹாவம்ச பக்கம் 03

## சுவிஸ் தூதர் திருப்பி அழைக்கப்பட்டாரா?

### மறுக்கிறது சுவிஸ் அரசு

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் இருந்து சுவிற்சர்லாந்து தூதுவர் ஹான்ஸ்பீற்றர் மொக் திருப்பி அழைக்கப்பட் டுள்ளார் என வெளியாகிய செய்திகளை சுவிஸ் அரசு நிராகரித்துள்ளது.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகப் பணியா ளர் கடத்தப்பட்டு அச்சுறுத் தப்பட்டார் பக்கம் 03

## மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜனாதிபதிக்குப் பெற்றுக் கொடுப்போம்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, டிசெ.12

பொதுத் தேர்தலில் புதிய அர சாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அதிகாரத் தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அர்ப்பணிப் புடன் செயற்பட வேண்டியுள்ளதாக அதன் தலை பக்கம் 03

## கிணற்றில் தவறி விழுந்து இருபாலையில் சிறுமி சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

இருபாலைப் பகுதியில் நேற்றுச் சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார். பக்கம் 03

## தமிழரசின் 70 ஆம் ஆண்டு நிறைவு விழா 18 ஆம் திகதி

### நல்லூரில் நடத்துவதற்கு ஏற்பாடு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 12

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 18 ஆம் திகதி நல் லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நடைபெற வுள்ளதாக அந்தக் கட்சி யின் மூத்த பக்கம் 03

## பாதுகாப்பு அமைச்சர் யார்? மங்களவின் சந்தேகம் இது

கொழும்பு, டிசெ. 12

பாதுகாப்பு அமைச்சர் யார் என்பது மில்லியன் டொலர் கேள்வியாக உள்ளது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப் பினர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார். பக்கம் 03



## சிறுப்பிட்டி விபத்தில் குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஹைஏஸ் வானும் மோட்டார் சைக் கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் குடும் பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – பக்கம் 03

## பலாலி விமான நிலையத்தில் மிகவிரைவில் புதிய வசதிகள்

### இந்திய உதவியில் ஏற்படுத்தப்படும்

கொழும்பு, டிசெ. 12

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவின் 30 கோடி ரூபா நிதியுதவியுடன் பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் தரஞ்ஜித் சிங்குடன் நடந்த பேச்சுக்களின் பின்னர் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். பக்கம் 03

## ஹெரோய்னுடன் இளைஞன் அச்சுவேலியில் கைதாகினார்



யாழ்ப்பாணம், டிசெ. 012

3 கிராம் நிறையுடைய உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத் பக்கம் 03

## சுவிஸ் தூதரகம் எதற்காக கடத்தல் நாடகம் ஆடியது?

### கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார் அமைச்சர்



கொழும்பு,டிசெ.12

கொழும்பில் சுவிஸ் தூதரக பெண் அதிகாரி கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் முற்று பக்கம் 03

## தேசியப் பாடசாலைகளுக்குப் பதிலாக 1,000 பிரதான பாடசாலைகள் விரைவில்

### பிரதேசத்தில் 3 பாடசாலைகளைத் தரமுயர்த்தத் திட்டம்

கொழும்பு, டிசெ.12

நாட்டில் சகல பிரதேச செயலர் பிரிவு களிலும் தலா 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஆயிரம் பிரதான பாடசாலை கள் மத்திய கல்வி அமைச்சின் நிர்வாகத் தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

தற்போதுள்ள தேசியப் பாடசாலை என்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு தேசிய என்ற சொற்பதம் நீக்கப்பட்டு பிரதான பாடசாலை என்ற திட்டம் கல்வி அமைச் சால் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி பக்கம் 03

## பிரதமர் மஹிந்தவிடம் 88 அரச நிறுவனங்கள்!

### புதிய அமைச்சரவைப் பொறுப்புகள் அடங்கிய வர்த்தமானி வெளிவந்தது

கொழும்பு, டிசெ.12

அரச சார்பற்ற நிறுவனங்களின் செய லகம், இடர் முகாமைத்துவ மத்திய நிலை யம் அடங்கலாகப் பாதுகாப்பு அமைச் சின் கீழ் 31 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன், பிரதமர் பக்கம் 03

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கவேண்டியது அவசியம்

## வலியுறுத்துகிறார் சிவஞானம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ.12

ஜனாதிபதியின் தீர்மானத்தின் பின்னராக சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த வேண்டியது மிக அவசியமானது. ஆகையால் மணல் அகழ்வதற்கு கட்டுப்பாடுகளை விதித்து போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை தளர்த்தவேண்டுமென்று தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத்தலைவருமான சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கனியப் பொருள்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் பெறுவதை புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரத்துச் செய்துள்ளமையை வரவேற்கின்றோம். ஆனால் அதனால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றோம்.

அதாவது நாட்டில் புதிதாகப் பதவியேற்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய மணல், கல் பொருள்களுக்கு வழித்தட அனுமதிப் பத்திரங்கள் பெறுவதைத் தடை செய்திருக்கின்றார். அவ்வாறு இந்தப் பொருள்களின் போக்குவரத்தை இலகுபடுத்தியது வரவேற்கக் கூடிய விடயம்தான்.

ஆனால் இப்போது அனுமதிப் பத்திரம் இல்லை என்றவுடன் குறிப்பாக மணலைப் பொறுத்த வரை எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் எங்கெல்லாம் மணல் எடுக்க முடியுமோ அங்கெல்லாம் மணல்அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக மக்களுக்கு பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் இந்த மணல் அகழ்வுப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இது தொடர்பில் மக்கள் பல்வேறு முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

ஆகவேதான் போக்குவரத்தை இலகுபடுத்திக் கொண்டு அதாவது போக்குவரத்துக்கு எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் வழித்தட அனுமதிப் பத்திரங்களை வழங்கினாலும் மணல் அகழ்வுக்கான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டுமென்று கோருகின்றோம்–என்றார். (ஐ–07)

# கோட்டாவிடம் மைத்திரிபால முன்வைத்துள்ள கோரிக்கை

கொழும்பு, டிசெ. 12

இலங்கையிலிருந்து போதைப் பொருளை முற்றாக இல்லாதொழிக்கும் செயற்றிட்டத்தைப் புதிய அரசு ஆரம்பிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று வாரங்கள் கடந்துள்ளன.

அவர் இந்தத் தேர்தலில் பாரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டுள்ளார். இன்று இலங்கையில் புதிய தலைவரும் புதிய அரசும் முன்வந்துள்ளன.

இவர்களுக்கு நாம் முழுமையான ஆதரவினை வழங்க வேண்டும். விசேடமாக அரசு என்ற வகையில், நாட்டில் இருக்கும் வறுமையை முற்றாக இல்லாதொழிக்கவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

பொருளாதாரத்தையும் அரசு பலப்படுத்த வேண்டும். இதற்காக எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்க நாம் தயாராகவே இருக்கிறோம்.

இந்த விடயத்தை ஜனாதிபதியால் மட்டும் தனியாக மேற்கொள்ள முடியாது. இதற்குப் பிரதமர் உள்ளிட்டவர்களின் ஆதரவும் அவசியமாகும்.

அத்தோடு மக்கள், அரச உத்தியோகஸ்தர்களும் இதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

போதைப்பொருள் வர்த்தகம் இன்று தலைத்தூக்கியுள்ளது. இதனை முற்றாக அழித்தொழிக்க வேண்டும். இதனைத்தான் மக்கள் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள்– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது.

கேட்கப் பரிதாபமான கதை இது.

2015 ஜனவரியில் மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவான போது அந்த ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் எண்ணில்லாதவை.

அதில் முக்கியமான ஒன்று – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இருக்கும் ஒருவருக்கு அந்தப் பதவிக்காலத்தில் அவர் இழைத்த அல்லது இழைக்காமல் விட்ட ஒரு விடயத்துக்காக அவர் மீது வழக்கு ஏதும் தொடுக்க முடியாதது என்பதாகும்.

அது வரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டிக்கிரி பண்டா விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ என அனைவருமே இந்தச் சிறப்புரிமையை முழுமையாக அனுபவித்தனர். அவர்களின் பதவிக் காலத்தில் அவர்கள் இழைத்த அல்லது இழைக்காமல் விட்ட எந்த விடயத்துக்காகவும் அவர்கள் மீது வழக்கு எதுவும் போடப்படவேயில்லை.

இந்த மனிதர் – மைத்திரிபால சிறிசேன – தாம் பதவிக்கு வந்து நான்கு, ஐந்து மாதங்களிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பேன் என நாட்டு மக்களுக்குத் தேர்தல் சமயத்தில் தாம் வழங்கிய உறுதி மொழிப்படி, 19ஆவது திருத்தத்தைத் கொண்டு வந்தார். அதன்மூலம் தமது தலையில் தாமே மண் அள்ளிப் போடவும் அவர் தவறவில்லை.

ஆறு ஆண்டுகள் பதவிக் காலத்துக்கு மக்களால் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட அவர், அதில் ஓராண்டை இழந்தமை உட்பட பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியவரானார். அதன் விளைவுகளை ஒவ்வொன்றாக அவர் எதிர்கொள்ளும் நெருக்கடி இன்னும் மோசமாகக் தொடர்கின்றது என்பதுதான் சோகமான விடயம்.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடரமுடியாது என்ற ஏற்பாட்டை அவர் மாற்றியமைத்தார். அடிப்படை உரிமை மீறல் மனு போன்றவற்றை ஜனாதிபதிக்கு எதிராகவும் தொடுக்க முடியும் என்ற திருத்தத்தை 19ஆவது திருத்தச் சட்டத்தில் அவர் புகுத்தினார்.

அவர் புகுத்தினாரா அல்லது அவருக்குத் தெரியாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணிகள் அந்த விடயத்தை ஆரவாரம் – சத்தம் சந்தடி – இன்றி 19ஆவது திருத்தத்துக்குள் சொருகிக் கொண்டனரா என்பது தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் அப்படி ஜனாதிபதிக்கு இருந்த சிறப்புரிமையை விலக்கியதன் விளைவை இப்போதுதான் அவர் மிக மோசமாக அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றார்.

ஜனாதிபதி பதவியில் இருந்த வரை இந்தச் சிறப்புரிமை விலக்கினால் அவருக்குப் பாதிப்பு இருக்கவில்லை. அவருக்கு எதிராக ஜனாதிபதி என்ற முறையில் தொடரப்பட்ட வழக்குகள் விடயத்தைச் சட்டமா அதிபர் திணைக்களமே கையாண்டது.

ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல. முன்னாள் ஜனாதிபதியாகி விட்டார் அவர். வழக்குகள் பலவும் அவரின் பெயர் குறிப்பிட்டுத் தொடரப்பட்டுள்ளன. அதனால் தனிப்பட்ட முறையில் தாமே சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்த வேண்டிய சிக்கல் அவருக்கு.

ஜனாதிபதிப் பதவியை விட்டு இறங்கியபின்னர் பொதுவாழ்க்கை, தொடர் அரசியல் நடவடிக்கைகள் என்று ஈடுபடாமல், தமது நேரத்தையும் பணத்தையும் தமக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளை எதிர்கொள்வதற்காகச் செலவிட வேண்டிய கட்டாயம் அவருக்கு நேர்ந்திருக்கின்றது.

பல வழக்குகள். அவற்றில் பல சிக்கலானவை. அந்த வழக்குகளுக்கு சட்டத்தரணிகளை அனுப்பாமல் உதாசீனமாக நடந்தால் சில வேளைகளில் விடயம் விபரீதமாகி விடலாம். சட்டத்தரணிகளாகவும் சாதாரணமானவர்களை அனுப்பமுடியாது.

தமது ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் ‘ஜனாதிபதி சட்டத்தரணி’ பதவிகளைப் பலருக்கும் வாரி இறைத்தவர் அவர். ஆனால் அதற்காக அவருக்கு இலவசமாக நீதிமன்றங்களில் பிரசன்னமாக எந்த ஜனாதிபதி சட்டத்தரணியும் தயார் இல்லை என்பதுதான் அவர் மனதை நெருடக் கூடிய விடயமாகும்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விடயத்தில் குற்றச்சாட்டை இலகுவாக அப்போதைய பொலிஸ் மா அதிபர் மீதும் பாதுகாப்புச் செயலாளர் மீதும் சுமத்தி விட்டுத் தாம் ஜாலியாகப் பதவியிலிருந்து விலகிச் ‘சும்மா’ இருக்கலாம் என்று கருதிய மைத்திரியாருக்கு அந்த வினை விடுவதாக இல்லை.

இந்தக் குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்ட பலர் தனித்தனியாக அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். அவற்றில் மைத்திரிபாலசிறிசேன பெயர் குறிப்பிட்டு எதிர்மனுதாரராகப் பதியப்பட்டுள்ளார்.

ஏழு, எட்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இப்படித் தாக்கலாகியுள்ளன. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போதே உயர் நீதிமன்றம் இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்று, ஏழு நீதியசர்கள் கொண்ட ஆயத்தின் முன்னால் அவற்றை விசாரணை செய்வதற்குத் தீர்மானித்துவிட்டது.

இந்த விடயத்தில் பொலிஸ் மா அதிபரையும், பாதுகாப்புத் செயலாளரையும் பலிக்கடாவாக்கி விட்டுத் தாம் அலுங்காமல் நலுங்காமல் தப்பி விடலாம் என்று பார்த்த மைத்திரியாருக்கு இந்த வழக்குகள் காலைச் சுற்றிய பாம்பாகி விட்டன.

இப்போது அவர் முன்னாள் ஜனாதிபதி. இந்த வழக்குகளில் அவர் பெயர் குறிப்பிட்டு எதிர்மனுதாரராக உள்ளார். ஆகவே தாமே இந்த வழக்குகளுக்குத் தமக்குரிய சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்த வேண்டிய இக்கட்டு அவருக்கு.

தவிரவும், தமது பதவிக்காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றியே தீருவேன் என்று அரசியல் ஸ்டண்ட் அடித்த காரணத்தினால், அந்த விடயத்திலும் அவருக்கு எதிராக நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

வண ஞானசாரதேரரை பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்தமைக்கு எதிராக பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியும், மாற்றுக் கொள்கைகளுக்கான மையமும் தாக்கல்செய்த இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நிலுவையில் உள்ளன.

கடைசியாகப் பதவி விலகிச் செல்ல முன்னர் றோயல் பார்க் இளம்பெண் படுகொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜெயமஹா என்ற கைதிக்கு அவர் மன்னிப்பு அளித்த விடயத்துக்கு எதிராக இப்போது அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனை இன்னும் விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்து உயர்நீதிமன்றம் தீர்மானிக்கவில்லை.

எனினும், அந்தத் தீர்மானத்துக்கு முன்னரான விசாரணைக்கு அந்த மனுவில் தனித்து ஓர் எதிர் மனுதாரராகப் பெயர் குறிப்பிட்டு பதியப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நோட்டீஸ் பிறப்பிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இப்படி உயர்நீதிமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மல்லுக்கட்ட வேண்டிய வழக்குகள் பல இருக்கின்றன.

இவற்றில் அனேகமானவற்றில் மைத்திரிபால சிறிசேன பெயர் குறிப்பிட்டு எதிர்மனுதாரராகப் பதியப்பட்டிருப்பதால் அந்த வழக்குகளில் இனி அவர் சார்பாக சட்டமா அதிபர் பிரசன்னமாக மாட்டார்.

அவரே தமக்குரிய சட்டத்தரணிகளைத் தேடிப்பிடித்து நியமித்து, கட்டணங்களுக்கும் வழி செய்ய வேண்டும்.

மைத்திரியின் பதவிக் காலத்தின் அந்தத்தின் போது அவரது பிரதான ஆலோசகரான சிரால் லக்திலக (கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில், கடைசி நேரத்தில் மைத்திரியைக் கைவிட்டு, சஜித் பிரேமதாஸவின் ஆலோசகராக இணைந்து கொண்டவர்.) ஒரு தடவை இந்தப் பிரச்சினை குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

*“தனது பதவியின் முடிவின் பின்னர் இத்தகைய வழக்குகளுக்குத் தாமே தமக்கு சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்தி வேண்டும் என்ற சிக்கல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மனதை வாட்டுகின்றது, மலைக்க வைக்கின்றது”* – என்று அப்போது சுமந்திரனிடம் கூறியிருந்தாராம் அப்போதைய ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சிரால் லக்திலக.

தமிழர்களின் பல அரசியல் வழக்குகளில் எல்லாம் கட்டணம் ஏதுமின்றி, தாமாகவே நீதிமன்றில் ஆஜராகி, சிறப்பாக வாதாடி, பல வெற்றிகரமான சட்டத்தீர்ப்புகளைப் பெற்று வரும் சுமந்திரன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாவம் என்று கருதி அவருக்கும் இத்தகைய வழக்குகளில் இலவசமாக மன்றில் முன்னிலையாவாரா என்று விசாரித்துப் பார்த்தேன்.

அது சரிவராது என்று தெரிய வந்தது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளில் விசாரணையாளராக இருந்து ஜனாதிபதி மைத்திரியின் செயற்றிறனின்மையை முழுமையாக விமர்சிக்கும் தீர்ப்பை வழங்கியவர்களில் ஒருவர் சுமந்திரன். ஆகவே அதை ஒட்டிய வழக்குகளில் மைத்திரிக்காக அவர் முன்னிலையாக முடியாது.

அது சட்டத்துறையின் பண்பியல்புக்கு பொருந்தாத விடயம். வண. ஞானசாரதேருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு வழங்கியமையை காரசாரமாக விமர்சித்தவர் சுமந்திரன்.

காட்டுமிராண்டித்தனமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முறையற்ற விதத்தில் தண்டிக்கப்பட்டு நீண்டகாலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காமல், இளம் யுவதியைப் படுகொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜெயமஹா என்ற கைதிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு அளிப்பதா என்றெல்லாம் முன்னர் சீறியவர் சுமந்திரன்.

இதனால் இந்த வழக்குகளிலும் மைத்திரியாருக்காக சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாக முடியாது என்பது தெளிவு.

ஆகவே இந்த வழக்குளில் சுமந்திரன் அல்லாத ஒருவரைத் தான் தமக்காக உயர்நீதிமன்றில் முன்னிலையாக மைத்தியார் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கும். இதுதான் அவரது இன்றைய பரிதாப நிலைமை...!

**- மின்னல் -**

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹட்டனில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கையாக இருந்தது. ஆனால் அந்த கோரிக்கையை இதுவரைக்கும் தெற்கின் பெரும்பாலான சிங்கள சமூகம் ஏற்றுக் கொள்ளாத ஒரு சூழ்நிலையிலேயே தற்போது அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்பட வேண்டும் என ஞானசார தேரர் கூறியுள்ளார். அவர்களின் விடுதலை தொடர்பாக ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனை ஞானசார தேரருக்கு வந்தது வரவேற்கத்தக்க விடயமாகும். இந்த சிந்தனை அனைத்து தெற்கு சமூகத்தினரிடமும் வரவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

இது ஒட்டு மொத்த தமிழ் மக்களுடைய அரசியல் சார்ந்த பிரச்சினையாகும். இந்த அரசியல் சார்ந்த பிரச்சினையை அரசியல் ரீதியாகவே நோக்க வேண்டும். இதனை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கண்கொண்டு பார்க்க கூடாது என்பதுதான் எங்களது கோரிக்கையாக இருக்கின்றது.

இப்போது ஓரளவுக்கு ஞானசார தேரர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். ஆனால் அதனை ஆராய்வதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் நாங்கள் கூறுவது ஆணைக்குழுக்கள் நியமிப்பது ஒரு கண் துடைப்புச் செயலாகும். கடந்த காலங்களில் எத்தனையோ ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எந்த அரசாங்கத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. இது காலத்தை இழுத்தடிக்கின்ற ஒரு செயலாக நாங்கள் கருதுகின்றோம்.

அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் ஜனாதிபதி அவர்கள் விடுதலை செய்யவேண்டும். ஆணைக்குழுக்களை அமைப்பது காலத்தை இழுத்தடிக்கின்ற செயல். இந்த பயங்கரவாத தடை சட்டத்தை வைத்து கொண்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வது ஒரு சாத்தியமற்ற செயல்.

எனவே பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்கி, அரசியல் கைதிகள் அனைவரையும் அரசியல் தீர்மானத்திற்கு ஊடாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஞானசார தேரர் மற்றும் அவரைச் சார்ந்த அமைப்பினர் மற்றும் அதுபோன்று தெற்கின் சிங்கள சமூகம் முன்வைக்க வேண்டும் என்பது எங்களது கோரிக்கையாக இருக்கின்றது. – என்றார்.

## கிணற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயார் வெளியே சென்ற நிலையில் சித்தியுடன் இருந்த சிறுமியே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## தமிழாக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகம், செத்சிறிபாயவில் அமைக்கப்பட்டுள்ளது.

மஹாவம்சத்தின் முதலாவது அத்தியாயத்தில் இருந்து ஆறாவது அத்தியாயம் வரை தமிழில் மொழி பெயர்க்கப்படவுள்ளது. அத்துடன், முதலாம் அத்தியாயத்திலிருந்து ஆறாவது அத்தியாயம் வரை ஆங்கிலத்திலும் மொழி மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ)

## சிறுப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

அச்சுவேலியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம்.திலீபன் (வயது -40) என்ற குடும்பத் தலைவரே விபத்தில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த வானும் எதிரே பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## சுவிஸ் தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து, தமது தூதுவரை சுவிஸ் அரசு அழைத்துள்ளதாகச் சிங்கள ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

இதுகுறித்து சுவிஸ் வெளிவிவகார சமஷ்டித் திணைக்களத்தின் பேச்சாளரிடம், கொழும்பில் இருந்து தூதுவர் மொக் திருப்பி அழைக்கப்பட்டுள்ளாரா அல்லது, அழைக்கப்படவுள்ளாரா என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்துள்ள சுவிஸ் வெளிவிவகாரத் திணைக்கள பேச்சாளர், இந்தத் தகவல் சரியானது அல்ல, சுவிஸ் தூதுவர் தற்போது கொழும்பிலேயே இருந்து பணியாற்றி வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவம் பொய்யானது என்று இலங்கை அரசு கூறிவரும் நிலையில், சுவிஸ் தூதுவர், கடத்தப்பட்ட பணியாளர் தொடர்பாக சிங்கள ஊடகங்களில் பொய்யான தகவல்கள் பல வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## ஹெரோய்னுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அச்சுவேலியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்புக் குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று நண்பகல் நடத்திய சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

22 வயதுடைய சந்தேகநபர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்புக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார். அவர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி உள்ளிட்ட 3 அமைச்சுகளின் கீழ் 88 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் அமைச்சுக்களுக்குக் கீழான திணைக்களங்கள் அடங்கிய அதி சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

முப்படைகள், பொலிஸ் மற்றும் அரச புலனாய்வுச் சேவை ஆகியவை பாதுகாப்பு அமைச்சின் கீழ் உட்பட்டுள்ளமையுடன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களம், இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட 31 நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ், திறைசேரி, மத்திய வங்கி, பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் அனைத்து அரச வங்கிகள் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்கள் உட்பட 48 நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றும் இரு அமைச்சுகளான புத்த சாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சின் கீழ் அனைத்து மத விவகாரத் திணைக்களங்கள், தொல்பொருள் மற்றும் கலாசார அலுவல் திணைக்களங்களும், நீர் வழங்கல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் என மொத்தம் 40 நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

64 பக்கங்களைக் கொண்ட இந்த வர்த்தமானியில் 29 அமைச்சர்களுக்கான விடயதானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் 43-1 ஆவது பிரிவு மற்றும் 46-1 ஆவது பிரிவு ஆகியவற்றின் படி, அமைச்சர்களுக்கு உள்ளடங்கும் விடயங்கள், செயல்பாடுகள், திணைக்களங்கள், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் ஆகியன இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரச தகவல் திணைக்களம், அரச அச்சகத் திணைக்களம் மற்றும் அரச ஊடக நிறுவனங்கள் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவை திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் கீழ் இடம்பெற்றுள்ளன. (ஜ)

## சுவிஸ் தூதரகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுதாகத் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகம் என்றும், இது குறித்த ஆதாரங்கள் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளன எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பல உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தச் சம்பவம் முற்று முழுதாக திட்டமிடப்பட்டு நகர்த்தப்பட்ட நாடகமாகும். இது ஒரு நாடகம் என்பதற்கான சாட்சியங்களுடன் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது.

இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில் யார் உள்ளனர் என்பதை மட்டுமே இப்போது நாம் கண்டறிய வேண்டியுள்ளது. இந்தச் சம்பவம் முற்று முழுதாக நாடகம் என்பது எமக்கு நன்றாகவே தெரிந்த ஒன்றாகும். ஆகவே அரசாங்கமாக நாம் இந்தச் சம்பவம் குறித்து கவனமாக அவதானித்து வருகின்றோம்.

எனினும் சுவிஸ் தூதரகம் இதனை செய்ய காரணம் என்ன? இதன் பின்னணியில் யார் இவ்வாறு செயற்பட்டனர்? அவர்களின் உண்மையான நோக்கம் என்ன? – என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த செய்யப்பட்ட ஒரு விடயமே இது. அதற்கான சாட்சிகள் உள்ளன. அதேபோல் குற்றப்புலனாய்வு பிரிவினர் இப்போதும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு இடமளித்து நாம் தலையிடாது பார்த்துக்கொண்டுள்ளோம். விரைவில் உண்மைகள் வெளிவரும். – என்றார்.

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைத் தலைவரும், வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மகாகவி பாரதியாரின் 137 ஆவது ஜனன தினநிகழ்வில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவை வடக்கு – கிழக்கில் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக அங்கு அந்த நிகழ்வைப் பெரிய அளவில் இல்லாமல் சுருக்கமாகச் செய்ய இருக்கிறோம்.

அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகிலுள்ள நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் – என்றார். (ஐ-07)

## பலாலி விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தின் பயணிகள் முனையம் விரிவுப்படுத்தப்பட உள்ளதுடன் பயணப் பொதிபெல்ட்டும் நிர்மாணிக்கப்பட உள்ளது. கடந்த அரசு அவசரமாக இந்த விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துப் பிராந்திய விமான நிலையம் எனத் திறந்து வைத்தாலும் விமான நிலையம் சரியாக இயங்காத காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தில் பொது விமானப் பயணக் கட்டுப்பாட்டு உபகரணங்கள் உட்பட தேவையான உபகரணங்கள் இல்லை என இந்தியத் தூதரிடம் சுட்டிக்காட்டியமையை அடுத்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அவர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

பலாலி விமான நிலையத்தில் இருந்து புறப்படும் பயணிகளிடம் அறிவிடப்படும் வரியைக் குறைக்கமுடியுமா என்பதை ஆராயவுள்ளோம் – என்றார். (ஜ)

## மூன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் தொகுதி அமைப்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான வேலைத்திட்டங்களை வெற்றியடையச் செய்ய எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவருக்கு மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், மங்கள சமரவீர டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் வர்த்தமானியை அவதானியுங்கள். பாதுகாப்பு என்பது ஒரு பலம்பொருந்திய ஆட்சியாளரால் வழிநடத்தப்படும், ஓர் அதி விசேட அமைச்சு போல் உள்ளது. குறிப்பாக சமூக நன்னடத்தை, ஆள்பதிவு, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொலிஸ், சட்டம் மற்றும் ஒழுங்கு உட்பட்ட பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் மில்லியன் ரூபா பெறுமதியான கேள்வி என்ன என்றால், யார் பாதுகாப்பு அமைச்சர் என்பதே. எனப் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை மற்றொரு டுவிட்டர் பதிவில், ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து கடினமான சுமார் ஒரு மாதகாலம் கடந்திருக்கும் நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவின் நெறிமுறைகள் செயற்பட ஆரம்பித்திருக்கின்றன.

ஊடக நிறுவனமொன்றின் ஊடகவியலாளர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அதேபோன்று ஒரு கடத்தல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரான சுவிற்ஸர்லாந்துத் தூதரக ஊழியர் தற்போது நகைப்பிற்கிடமான வகையில் குற்றவாளி ஆக்கப்பட்டிருக்கின்றார். மீண்டும் அச்சமும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையும் உள்ள பள்ளமொன்றை நோக்கிச் செல்கின்றோமா?" – எனக் குறிப்பிட்டுள்ளார். (ஜ)

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபயவின் தேர்தல் அறிக்கையில் முன்மொழியப்பட்டமைக்கு அமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் 9 மாகாணங்களின் கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கொழும்பு கல்வி அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கருத்தரங்கிலேயே கல்வி அமைச்சு அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தை மாகாண கல்வி அமைச்சுகளுடன் இணைந்து விரைவாக முன்னெடுப்பது தொடர்பில் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு இந்தக் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்படி நாட்டிலுள்ள 331 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவை பிரதான பாடசாலைகள் என்ற திட்டத்தின் கீழ் மத்திய கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படவுள்ளன.

தற்போது தேசியப் பாடசாலைகள் நிர்வகிப்பது போன்று நாட்டில் ஆயிரம் பிரதான பாடசாலைகள் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதனால் தேசிய பாடசாலை என்ற பெயர் பிரதான பாடசாலை என்று மாற்றம் செய்யப்படவுள்ளது என்று கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது 353 தேசிய பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஜெனீவா செய்யக் கூடியது என்ன?

**இலங்கையில் புதிய ஆட்சிப் பீடம் அதிகாரத்தைப் பொறுப்பேற்றுள்ள சூழலில், நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் நாளை ஒட்டி, இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சசெட் அம்மையாருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றன.**

**நீதியையும், பொறுப்புக் கூறலையும் சாத்தியப்படுத்துவதற்கு அவசியமான அரசியல் விருப்போ, பற்றுறுதியோ, திடசங்கற்பமோ இலங்கை அரசிடம் இல்லை என்பதால் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை இனிவரும் கூட்டத் தொடரில் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று அதில் கோரப்பட்டுள்ளது.**

**இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவை தொடர்பில் நீதி விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, உரிய இழப்பீடுகளைப் பாதிப்புற்றோருக்கு வழங்கி, நல்லிணக்கத்தை உருவாக்கி, புரிந்துணர்வை ஏற்படுத்தி, அமைதித் தீர்வை எட்டுவதற்கு பல வழிமுறைகளை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் பின்பற்றியிருந்தது. பல முயற்சிகளை முன்னெடுத்திருந்தது.**

**இவ்விடயம் தொடர்பாக யுத்தம் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டு முதலே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் (முன்னர் ஆணைக்குழு) பல்வேறு நடவடிக்கைகள், விவாதங்கள், தீர்மானங்களை மேற்கொண்டதாயினும் 2015 மார்ச்சில் அதன் ஜெனீவாக் கூட்டத்தில்தான் காத்திரமான சில விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

**"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்" – என்ற திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த முயற்சிக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக 30/1 என்ற முக்கிய தீர்மானம் கவுன்ஸிலில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது.**

**அந்தத் தீர்மானத்தில் கூறியுள்ளபடி நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மனித உரிமைகள் நிலையை மேம்படுத்த கடந்த ஐந்து ஆண்டுகளாக உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை.**

**முதலில் இரண்டு வருட கால அவகாசம் வழங்கிய நிலையில் 2017 இல் 34/01 இலக்கத் தீர்மானம் மூலம் மேலும் இரண்டு வருட கால அவகாசமும் –**

**அப்போதும் ஏதும் செய்யப்படாத நிலையில் 2019 மார்ச்சில் 40/01 இலக்கத் தீர்மானம் மூலம் பின்னரும் இரண்டு வருட கால அவகாசமும் –**

**இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு வழங்கப்பட்டன.**

**கடைசியாக 2019 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட 40/01 இலக்கத் தீர்மானத்தின்படி இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் நிலைவரம் ஆகியவற்றை மேம்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வரும் பெப்ரவரி – மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 43ஆவது அமர்வில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் மேலோட்டமான அவதானிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.**

**அதன்பின்னர், 2021 மார்ச்சில் நடைபெறும் கவுன்ஸிலின் 46 ஆவது கூட்டத் தொடரில் இவ்விடயத்தை ஒட்டி ஆணையாளரின் விரிவான அறிக்கைகயும் அதையொட்டிய விவாதமும் நடைபெற்று முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும்.**

**ஆனால், இதுவரை ஆட்சியில் இருந்த மைத்திரி – ரணில் கூட்டு அரசு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்குக் கட்டுப்படுவதாகக் கூறிக் கொண்டு அதன் வழி நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி, இழுத்தடித்து வந்தது.**

**எனினும், இப்போது பொறுப்பேற்றிருக்கும் ராஜபக்ஷக்களின் அரசு அந்த கவுன்ஸிலின் தீர்மானத்தை ஏற்கவோ, அதன் மீதான கடப்பாட்டை நிறைவேற்றவோ போவதில்லை என்று வெளிப்படையாகவும், திட்டவட்டமாகவும், உறுதியாகவும் அறிவித்து விட்டது.**

**இந்தப் பின்புலத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சுட்டிக்காட்டிக் கோரியபடி மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு இனிமேலும் கால அவகாசத்தை வழங்கிப் பார்த்திருப்பதில் அர்த்தமேயில்லை என்பதுதான் உண்மை.**

**ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்கத் தீர்மானத்தையோ அதன் தொடராக 2017 இல் நிறைவேற்றப்பட்ட 34/01 இலக்கத் தீர்மானத்தையோ அல்லது 2019 இல் நிறைவேற்றப்பட்ட 40/01 இலக்கத் தீர்மானத்தையோ ஏற்கப் போவதில்லை என இலங்கையின் புதிய அரசு அறிவித்துள்ள நிலையில் –**

**கடைசியாக நிறைவேற்றப்பட்ட 40/01 இலக்கத் தீர்மானத்தின்படி 2021 மார்ச் வரை இலங்கைக்குக் கால அவகாசம் கொடுத்துக் காத்திருப்பதில் அர்த்தமில்லை.**

**காணாமலாக்கப்பட்ட உறவுகள் சுட்டிக்காட்டியபடி அந்தத் தீர்மான விடயங்களை முடிவுறுத்தி, கால அவகாசம் வழங்கலுக்கு முற்றுப் புள்ளி வைத்து, மறுவேலையைப் பார்ப்பது தான் கவுன்ஸில் செய்யக் கூடிய உசிதமான வேலையாக இருக்கும்.**

# மன்னார் மீனவர்களுக்கு நியாயமான தீர்வை பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் உறுதி!



மன்னார், டிசெ. 12

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பொருத்தமான நீர் நிலைகளில் இறால் வளர்ப்பு மற்றும் நண்டுப் பண்ணை போன்றவற்றுக்கான வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கான உத்தரவுகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் வழங்கினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, கடலரிப்பு, துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறைகளை பயன்படுத்துவதில் நிலவி வரும் நடைமுறை ரீதியான சிக்கல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் மன்னார் மாவட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளினால் எடுத்துக் கூறப்பட்டன.

மீனவர்களின் பிரச்சினைகளைச் செவிமடுத்த அமைச்சர், நேரடியாக மன்னார் பிரதேசத்திற்கு விஜயம் செய்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர், நியாயமான தீர்வுகளைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். (ஐ)

# பொலிஸ் சிற்றுண்டிச்சாலை காங்கேசன்துறையில் திறப்பு





யாழ்ப்பாணம், டிசெ. 12

காங்கேசன்துறையில் பொலிஸ் சிற்றுண்டிச் சாலை ஒன்று நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

பொது மக்கள் மற்றும் பொலிஸாருக்குக் குறைந்த விலையில் சிற்றுண்டிகளை வழங்குவதற்காக இந்தச் சிற்றுண்டிச் சாலை திறக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சி.டபிள்யூ. சேனாதிரா தெரிவித்தார்.

இந்தச் சிற்றுண்டிச் சாலை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அண்மையாக உள்ள இடத்தில் நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி விஜேயவர்த்தன, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஷ் சேனாரத்னவும் இணைந்து சிற்றுண்டிச்சாலையைத் திறந்து வைத்தனர்.

இந்தச் சிற்றுண்டிச் சாலை காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த நிகழ்வுக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஷ் சேனாரத்ன தனது குடும்பத்தினருடன் கீரிமலை நகுலேஸ்வரத்தில் சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார். (ஐ – 07)

# தேர்தல்வேளை ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டம்!

கொழும்பு, டிசெ. 12

தேர்தல் காலத்தில் அரச, தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய விதத்தில் புதிய சட்டத்திருத்தங்களைக் கொண்டு வருவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் ஆராய்ந்ததாக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள ஒழுக்க விதிகளின் படி அரச ஊடகங்களை மட்டுமே கட்டுப்படுத்தக்கூடியதாக இருப்பதால், தனியார் ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்களை மட்டுமே வழங்க முடியுமெனவும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது இது விடயத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும், சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டியதன் அவசியம் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சகல ஊடகங்களும் நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் நடந்துகொள்ளவேண்டியதன் அவசியத்தைத் தெளிவுபடுத்திய ஆணைக் குழுத் தலைவர் இதற்கமைய சட்டத்தில் முழுமையான திருத்தங்களைச் செய்து ஒழுக்க விதிக் கோவையைத் தயாரிப்பது குறித்து ஆராயப் பட்டதாகவும் அவர் கூறினார்.

சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று அமுலாக்கக்கூடியதாக இருக்கும் எனவும், அனைத்து ஊடகங்களுக்கும் பொதுவான ஒழுக்க விதிக்கோவையை தயாரிப்பதே ஆணைக்குழுவின் நோக்கமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அதே சமயம் எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலின்போதும், ஏனைய தேர்தல்களின் போதும் அவற்றுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அத்துடன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயாதீன குழுக்கள் பின்பற்றவேண்டிய விதிகளை மறுசீரமைப்பது குறித்தும் கூட்டத்தில் கருத்து வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும் ஆணைக்குழுவின் சிபாரிசுகள், எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். நாம் எடுக்கும் முடிவுகளை எம்மால் சட்டமாக்க முடியாது. நாடாளுமன்ற அங்கீகாரமின்றி ஆணைக்குழுவால் அமுல்படுத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடையாது என்று மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். (ஐ)

## நாளை

13.12.2019 – வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.ப 7.47 வரை
திதி : பிரதமை மு.ப 11.12 வரை

இராகுகாலம் : 10.50 – 12.20
சுப நேரம் : 6.20 – 7.50

# இணையத் தாக்குதல்களைக் கையாள புலனாய்வு அமைப்புகளுக்குப் பயிற்சி

## பேராசிரியர் றொகான் குணரத்ன வலியுறுத்தல்



கொழும்பு, டிசெ. 12

எதிர்காலத்தில் இணையத் தாக்குதல்களைக் கையாளும் வகையில் இலங்கைப் புலனாய்வு அமைப்புகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும் என்று, சிங்கப்பூரின் நயாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு கற்கைகள் பேராசிரியர் றொகான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபது ஆணைக்குழுவின் முன்பாக நேற்றுமுன்தினம் சாட்சியம் அளித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலகெங்கும் உள்ள அரசுகள் இணையத் தாக்குதல் அச்சுறுத்தலை அங்கீகரித்து அவற்றைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளன. எனினும், இலங்கையில் தயார்நிலை போதுமானதாக இல்லை.

இலங்கைப் புலனாய்வு அமைப்புகளும் தொடர்புடைய நிறுவனங்களும் இணையத் தாக்குதல்களைச் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும்.

இலங்கைப் புலனாய்வு அமைப்புகளுக்கு இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் தரவு சேகரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

தாக்குதல் நடத்துபவர்களின் சமூக ஊடக ஊட்டங்கள் மூலம், பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றிய தகவல்களைப் புலனாய்வு அமைப்புகள் பெற்ற உதாரணங்கள் பல உலகில் உள்ளன. இலங்கைப் புலனாய்வு அமைப்புகள் நவீன மயமாக்கப்பட்டு தயாராக இருக்க வேண்டும். இது ஒரு முக்கியமான துறை – என்றார்.

# மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திடத் தயாராகிறது அரசு

கொழும்பு, டிசெ. 12

புதிய அரசு மிலேனியம் சவால் நிறுவனத்துடன் கொடை உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்குத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.க. அரசு ஆட்சியில் இருந்தபோது, அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் கொடையை பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன பெரமுனவும் அதன் பங்காளிக் கட்சிகளும், மிலேனியம் சவால் உடன்பாடு நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், அதில் கையெழுத்திடக் கூடாது என்றும் கடுமையான பரப்புரைகளை மேற்கொண்டன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த தீவிரமான பரப்புரை ஐ.தே.கவுக்குக் கடும் நெருக்கடியையும் பின்னடைவையும் ஏற்படுத்தியிருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு பதவிக்கு வந்த பின்னரும், மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திடப் போவதில்லை என்றே கூறியிருந்தது.

ஆனால், தற்போது. அரசு மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்குத் தயாராகி வருவதாக ஐ.தே.க. பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசில் உள்ள சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மிலேனியம் சவால் உடன்பாட்டில் 70 வீதம் நல்லது என்று கூறியிருக்கிறார்கள். அடுத்து அவர்கள் உடன்பாட்டின் 90 வீதம் நல்லதே என்று கூறக் கூடும்.

மிலேனியம் சவால் உடன்பாட்டில் தற்போதைய அரசு கையெழுத்திட்டால் கூட ஆச்சரியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிலேனியம் சவால் கொடையின் 70 வீதம் போக்குவரத்து துறை அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படவுள்ளது, இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று, அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழருக்குத் தீர்வு தரும் எண்ணம் கோட்டாவிடம் அறவே இல்லை





## கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, டிசெ. 12

தமிழர்களுக்கான பிரச்சினைகளை தீர்க்கும் எண்ணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இல்லை எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஊரெழுச்சி வேலைத்திட்டத்திற்கு அமைய ஒதுக்கி அமைக்கப்பட்ட பூநகரி வாடியடி சந்தைக்கான கட்டடத்தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி ஏற்ற நாளி லிருந்து நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகளால்மட்டும்தெரிவுசெய்யப்பட்டேன் என்கிற மமதையில் கூறிக்கொண்டு இருக்கிறார். இதுவரை வடக்கு மாகாணத்துக்கு ஆளுநரைக் கூட தெரிவு செய்ய மனம் இல்லாதவர் தமிழர்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பாரா?

இந்திய விஜயத்தின் போது இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் விடயங்களை இந்தியாவில்வைத்தேநடைமுறைப்படுத்த முடியாது எனக் கூறுபவர் எமக்கு அதிகாரங்களைத் தருவாரா? எமது மக்களின் இலட்சக்கணக்கான கொலைகளுக்குக் காரணமான ஒரு போர்க் குற்றவாளியாக இருப் பவர். எம்மை இன்னும் அரவணைத்துச் செல்லும் மனப் பாங்குக்கு அவர் வரவில்லை. எமக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்றால் எமது அபிவிருத்திப் பணிகளைநாம் சுயமாகவே மேற்கொள்வோம் - என்றார்.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உபதவிசாளர், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பிரதேசசபையின் செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், சந்தை வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# இளையோர் அமைப்பால் குருதிக் கொடை முகாம்





யாழ்ப்பாணம், டிசெ. 12

எல்லாரா அறக்கட்டளையின் இளைஞர்களின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு நேற்று மல்லாகம் ஞானபிரகாசம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த இளையோர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு முதலாவதாக உரும்பிராய் பிரதேசத்தில் குருதிக்கொடை இடம்பெற்றிருந்தது.

நேற்று மல்லாகம் ஞானபிரகாசம் சனசமூக நிலையத்தில் குருதிக் கொடை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அமைப்பானது அடுத்ததாக மானிப்பாய், யாழ்ப்பாணம் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இளையோரைத் திரட்டி குருதிக் கொடை முகாம்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண இளைஞர் அணியை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அமைப்பே எல்லாரா அறக்கட்டளை அமைப்பாகும்.

இந்த அமைப்பானது ஒவ்வொரு பிரதேச ரீதியிலும் இளைஞர்களை இணைத்து சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

அவற்றில் வயோதிபர்களுக்கான சிறப்புச் செயற்திட்டங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்கள், போதைப்பொருள் ஒழிப்பது போன்றவையும் அடங்குகின்றன.

இந்த அமைப்பின் நோக்கம் இளைஞர்களை ஒன்றுபடுத்தி, நல்ல குடிமக்களை உருவாக்கி, சமூகத்தக நல்ல பாதையில் கொண்டு சேர்ப்பதே ஆகும் என்று அறக்கட்டளையின் போசகர் தவராஜா துவராகன் தெரிவித்தார். (ஐ – 07)

# பிரதமர் மோடிக்குக் கிடைத்த பரிசுகள் ரூ.15 கோடிக்கு ஏலம்

பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் 15 கோடி ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டுள்ளன.

பிரதமர் நரேந்திரமோடி வெளிநாட்டு பயணம் செல்கின்றபோது அவருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்படுவது வழக்கமாகும். இந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் பிரதமருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் ஏலம் விடப்பட்டுள்ளமை மூலம் 15 கோடியே 13 லட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

இத்தகவலை மாநிலங்களவை கேள்வி நேரத்தின்போது கலாசாரத்துறை அமைச்சர் பிரகலாத் படேல் தெரிவித்தார். பரிசுப் பொருள்கள் மூலம் கிடைத்த பணம் கங்கை நதியை புனிதப்படுத்தும் திட்டத்திற்கு வழங்கப்பட்டது என்றார்.



# மேற்குவங்க மாநிலத்தில் இரட்டைத் தலைப் பாம்பு



மேற்குவங்க மாநிலத்தில் இரட்டை தலைகளுடன் கூடிய பாம்பு ஒன்று பிடிபட்டுள்ளது.

கிழக்கு மிதினாப்பூரிலுள்ள காருகி கிராமத்தில் கருப்பு நிறத்தில் சுமார் ஒன்றரை அடி நீளம் கொண்ட இரட்டை தலைகள் கொண்ட பாம்பு ஒன்று தென்பட்டது. அந்தப் பாம்பு, அதிக விஷம் கொண்டது என வனத்துறையினர் கூறியுள்ளனர்.

இருப்பினும் அந்தப் பாம்பு வந்ததைத் தங்களது அதிர்ஷ்டமாகக் கருதி, அதைக் கிராம மக்கள் பால் கொடுத்து பராமரித்து வருகின்றனர். வனத்துறையினரிடம் ஒப்படைக்க கிராம மக்கள் மறுத்து விட்டனர்.

# இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க வலியுறுத்துகிறார் கமல்ஹாசன்



மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமை சட்டத் திருத்தத்தின் கீழ் இனப் படுகொலைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டிவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள கமல்ஹாசன், இலங்கையின் தமிழர்களும் முஸ்லீம்களும் ஏன் இந்த சட்டத் திருத்தத்தில் சேர்க்கப்படாமல் நீக்கப்பட்டுள்ளனர் என்று அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது வாக்கு வங்கிக்காக கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் அல்ல என்றால், இலங்கைத் தமிழர்களும் முஸ்லீம்களும் இணைக்கப்படாதமை ஏன் என்று கமல்ஹாசன் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய உடை அணிந்து நோபல் பரிசு பெற்றவர்கள்



நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட பேராசிரியர் அபிஜித் பானர்ஜியும் அவரது மனைவி எஸ்தர் டுப்லோவும், இந்திய பாரம்பரிய உடை அணிந்து அதை பெற்றுக் கொண்டனர்.

பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு அமெரிக்க வாழ் இந்தியரான அபிஜித் பானர்ஜி மற்றும் அவரது மனைவி எஸ்தர் டுப்லோ மற்றும் அமெரிக்காவின் மைக்கேல் கிரைமர் ஆகியோருக்குக் கூட்டாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் பரிசு வழங்கும் விழா சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் இசை அரங்கில் நடைபெற்றது. அப்போது அபிஜித் பானர்ஜி வேட்டி குர்த்தா அணிந்தும், அவரது மனைவி எஸ்தர் புடவை அணிந்தும் நோபல் பரிசை பெற்றுக் கொண்டனர்.

சர்வதேச வறுமை ஒழிப்பு பற்றிய ஆய்வுக்காக இவர்களுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

# பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தினகரனின் அ.ம.மு.கவுக்கு அங்கீகாரம்

டி.டி.வி. தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தைப் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக இந்தியத் தேர்தல் ஆணையம் அங்கீகரித்ததை தொடர்ந்து, சென்னையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்திற்கு சென்று அக்கட்சியின் பொதுச் செயலாளரான டி.டி.வி. தினகரன் மரியாதை செலுத்தினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஜினி – கமலுடன் கூட்டணி அமைப்பது குறித்து தன்னிடம் யாரும் பேசவில்லை என்றார். கூட்டணி தொடர்பாகத் தேர்தல் சமயத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்றார் அவர்



# தமிழகத்தில் குழந்தைகள் ஆபாசப் படங்களை பார்த்த மூவாயிரம் பேரை மடக்குகிறது பொலிஸ்

சென்னை,டிசெ.12

தமிழகம் முழுவதும் 3 குழுக்கள் இணையதளங்களில் குழந்தைகள் ஆபாச படங்களை பதிவேற்றம் செய்தமையைக் காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

இந்திய அளவில் தமிழகத்தில், அதிலும் குறிப்பாக சென்னையில்தான் குழந்தைகள் ஆபாச வீடியோ பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்கின்றன புள்ளிவிவரங்கள்.

தமிழகக் காவல் துறையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு சமீபத்தில் உருவாக்கப்பட்டது. இந்த பிரிவு கூடுதல் டி.ஜி.பி. ரவி தலைமையில் செயல்படுகிறது.

இந்த நிலையில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்க, தவறான வழியில் செல்லும் இளம் வயதினர் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமே முடியும் என்ற நோக்கத்தில் இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியான அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் ஆய்வறிக்கையில், குழந்தைகளின் ஆபாச படங்கள் இந்தியாவில்தான் அதிகம் பார்க்கப்படுகின்றன எனவும், அதிலும் தமிழகத்தில் – குறிப்பாக சென்னையில் – இந்த எண்ணிக்கை அதிகம் எனவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அதனடிப்படையில் குழந்தைகளின் ஆபாச படங்களைப் பார்ப்பவர்கள் பட்டியலை தமிழகக் காவல் துறைக்கு மத்திய உள்துறை அனுப்பி வைத்துள்ளது.

குழந்தைகளின் ஆபாசப்படங்கள் பார்ப்பதில் சென்னை முதலிடத்தில் இருப்பதாக செய்திகள் வெளியான நிலையில், இந்த வகை ஆபாச படம் பார்ப்பவர்களின் 3000 பேர் கொண்ட பட்டியல் தயாராக உள்ளதாகவும், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் பிரிவு கூடுதல் டி.ஜி.பி. ரவி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விவகாரம் தமிழகம் முழுவதும் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. தாங்கள் அந்தப் பட்டியலில் உள்ளோமோ..? அல்லது சிக்கி விடுவோமோ...? என்ற அச்சத்தில் பலர் உள்ளனராம்.

மேலும் பலரும் ஆபாச படம் பார்ப்பதை தவிர்த்து வருகின்றனர். இந்த நடவடிக்கை குறித்து சமூக வலைதளங்களில் பல்வேறு மீம்ஸ்களும், வீடியோக்களும் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன.

விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமூக வலைதளத்தில் இவ்வாறு செயல்பட்டாலும், காவல்துறையின் இந்த எச்சரிக்கையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு காவல்துறையினர், செல்போன் எண்களுக்குத் தொடர்பு கொண்டு மிரட்டிப் பணம் பறிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதற்கு ஆதாரமாக திருநெல்வேலி காவலர் ஒருவர் ஆபாச படம் பார்த்தார் என இளைஞர் ஒருவரை செல்போனில் விசாரிப்பது போல் ஓடியோ ஒன்று வெளியானது

இவ்வாறு மிரட்டுவது குறித்துக் காவல்துறைத் தரப்பில் கேட்டபோது, 3000 பேர் கொண்ட பட்டியலில் உள்ளவர்கள் மாவட்ட வாரியாகப் பிரிக்கப்பட்டு, தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு முறையாக அழைத்து விசாரிக்கப்படுவார்கள் என்றும், இதுபோன்று திடீரென செல்போனில் தொடர்பு கொண்டு காவலர்கள் விசாரிக்க மாட்டார்கள் என்றும் கூடுதல் டி.ஜி.பி. ரவி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், குழந்தைகள் ஆபாசப் படத்தை இணையதளத்தில் பதிவிட்ட, பார்த்த விவகாரத்தில் திருச்சியில் முதற்கட்ட விசாரணையைப் பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

திருச்சியில், இணையதள முகவரியில் குழந்தைகள் ஆபாசப் படங்கள் பார்த்தவர்களின், பரப்பியவர்களின் 60 பேரின் பட்டியலை வைத்து திருச்சி காவல் துறை விசாரணை நடத்துகின்றது.

தமிழகம் முழுவதும் 3 குழுக்கள் இணையதளங்களில் குழந்தைகள் ஆபாச படங்களைப் பதிவேற்றம் செய்தமையைக்காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

வாட்ஸ் ஆப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரப்பினால் அவர்கள் கண்காணிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளதாகக் கூடுதல் டி.ஜி.பி. ரவி தெரிவித்துள்ளார். இணையதளங்களில் குழந்தைகள் ஆபாசப் படங்களைப் பதிவேற்றம் செய்ததை காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர்.

# செக் குடியரசில் ஆஸ்பத்திரியில் துப்பாக்கிதாரி சூடு; 6 பேர் சாவு!

பிராகா,டிசெ.12

செக் குடியரசு நாட்டில் ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டுத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான செக் குடியரசின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஆஸ்ட்ராவ் நகரில், தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் நேற்று முன்தினம் காலை ஏராளமான நோயாளிகள் சிகிச்சைக்காக வந்து ஆஸ்பத்திரியில் உள்ள காத்திருப்பு அறையில் அமர்ந்திருந்தனர். அப்போது அங்கு வந்த நபர் ஒருவர் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். கண்ணில் பட்டவர்களையெல்லாம் குருவியைச் சுடுவதுபோல அவர் சுட்டுத்தள்ளினார்.

இதில் 6 பேரின் உடலில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து, அவர்கள் இரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து இறந்தனர். மேலும் 2 பேர் பலத்த காயம் அடைந்தனர். அதனை தொடர்ந்து தாக்குதல் நடத்திய நபர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

தாக்குதல் நடத்திய நபர் யார்? தாக்குதலின் பின்னணி என்ன? என்பன குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.



# அமெ. நியூஜெர்சியில் சூட்டுக்கு அறுவர் பலி





வொஷிங்டன்,டிசெ.12

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் ஹட்சன் ஆற்றுப்பகுதியை ஒட்டி உள்ள பல்பொருள் அங்காடிக்குள் நடந்த துப்பாக்கிச்சூட்டில், பொலிஸ் அதிகாரி உள்பட 6 பேர் பலியாகினர். பலியானவர்களில் 3 பேர் அப்பாவி பொது மக்கள் ஆவர். மேலும், 2 பேர் துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு பயங்கரவாதத் தொடர்பு இருப்பதற்கான எந்த ஆதாரங்களும் உடனடியாகக் கிடைக்கவில்லை என்று உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில், இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உள்பட 3 பேர் காயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து, ஜெர்சி நகரம் முழுவதும் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. துப்பாக்கிச்சூடு நடைபெற்ற பல்பொருள் அங்காடிக்கு விரைந்த பொலிஸார் அந்த இடத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் வேதனை அளிப்பதாக தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தக் கடினமான நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்காக இறைவனிடம் பிரார்த்திக்கிறார் எனவும், நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதோடு, உள்ளூர் நிர்வாகத்திற்குத் தேவையான உதவிகளை அளிக்க தயாராக இருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

# 'கட்'டான கைக் கட்டை விரலுக்கு கால் விரலைப் பொருத்திச் சாதனை



காதலிக்காக ஆசை ஆசையாக மரப்பொம்மைசெய்தபோது கை கட்டைவிரலை இழந்தவாலிபர் ஒருவருக்கு, அவரது கால் விரல் ஒன்றை எடுத்து கைக்கு கட்டை விரலாக மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்களுள் ஒன்றான மிச்சிகனில் உள்ள கார்சன் நகரத்தைச் சேர்ந்தவர் ஐடன் அட்கின்ஸ். இவர் கடந்த ஏப்ரல் மாதம் தனது காதலிக்கு மரபொம்மை ஒன்றைச் செய்து பரிசளிக்க விரும்பினார். அவர் வேகவேகமாக பொம்மை செதுக்கியபோது அவரது கையின் கட்டை விரலும் துண்டாகிப் பறந்தது.

கட்டை விரல் இல்லாமல் கைப்புண் ஆறிய போதும் அவர் மனம் தளர்ந்து இயல்பாக வாழ முடியாமல் தவித்தார். அவரது கால் விரல் ஒன்றை அறுவை சிகிச்சை மூலம் எடுத்து, கையில் கட்டை விரலுக்கு மாற்றாக வைக்கலாம் என்றனர் டாக்டர்கள். அவரது இடது காலில் கட்டை விரலுக்கு அடுத்து இருந்த விரலை அகற்றி, ஐடனின் இடது கை கட்டை விரல் இருந்த இடத்தில் மருத்துவர்கள் வெற்றிகரமாகப் பொருத்தினர்.

# செய்தியாளரின் செல்போனைப் பறித்த பிரிட்டிஷ் பிரதமரின் செயலால் சர்ச்சை

## இன்று தேர்தல் நடக்க இருக்கையில் கடைசி நேரச் சிக்கல்

லண்டன்,டிசெ.12

பேட்டி அளித்துக்கொண்டிருந்தபோது இங்கிலாந்து பிரதமர், நிருபரின் செல்போனை பறித்த சர்ச்சைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இங்கிலாந்தில் இன்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்தத் தேர்தலில் தற்போதைய பிரதமர் போரிஸ் ஜோன்சனின் பழமைவாதக் கட்சிக்கும், ஜெர்மி கார்பைன் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. 'பிரெக்ஸிட்' விவகாரம் இந்தத் தேர்தலில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

தேர்தலையொட்டி பிரதமர் போரிஸ் ஜோன்சன் இறுதிக்கட்டப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக இங்கிலாந்து சுகாதாரத்துறை சேவை அமைப்பின் விவகாரங்கள் தொடர்பாக அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசினார். நாட்டில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்தும், சுகாதாரத்துறையின் செயல்பாடுகள் குறித்தும் அவரிடம் நிருபர்கள் சரமாரியாகக் கேள்விகள் எழுப்பினர்.

அப்போது, தனியார் செய்தி சனல் ஒன்றின் நிருபரான ஜோ பைக் என்பவர் தனது செல்போனில் லண்டனில் உள்ள ஓர் அரசு மருத்துவமனையில் நிமோனியா பாதிப்பால் உடல்நலக் குறைவு ஏற்பட்ட 4 வயது சிறுவன் தரையில் படுக்கவைக்கப்பட்டிருந்த புகைப்படம் ஒன்றை போரிஸ் ஜோன்சனிடம் காட்டிக் கடும் விமர்சனம் செய்தார்.

இதனால் கோபமடைந்த போரிஸ் ஜோன்சன், நிருபர் ஜோ பைக்கின் செல்போனை அவரிடம் இருந்து பறித்து அதனைத் தனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டார்.

இந்தக் காட்சிகள் அடங்கிய வீடியோவை ஜோ பைன் தனது டுவிட்டரில் பகிர்ந்தார். உடனடியாக அந்த வீடியோ வைரலானது. 2 மணி நேரத்தில் 10 லட்சத்துக்கும் அதிகமானோர் அதைப் பார்த்தனர்.

அவர்களில் பலரும் போரிஸ் ஜோன்சனை விமர்சித்துக் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர். தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெர்மி கார்பைனும் இந்தச் சம்பவம் தொடர்பாக போரிஸ் ஜோன்சனுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். இன்று தேர்தல் நடக்க இருக்கும் நேரத்தில் போரிஸ் ஜோன்சன் இப்படியொரு சர்ச்சையில் சிக்கியிருக்கின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

(உ)

# அமெ.எல்லையில் சுவர் கட்டுவதற்கு இராணுவ நிதியை பயன்படுத்த தடை

## சமஷ்டி நீதிமன்றத் உத்தரவால் டிரம்புக்குப் பின்னடைவு

மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் கட்ட அமெரிக்க இராணுவ நிதியைப் பயன்படுத்த அந்நாட்டு சமஷ்டி நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் கட்டப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இதற்கான நிதியை ஒதுக்க அமெரிக்க நாடாளுமன்றம் மறுத்ததால், இராணுவக் கட்டுமான நிதியில் இருந்து இலங்கை மதிப்பில் சுமார் 65 ஆயிரம் கோடி ரூபாவை (360 கோடி டொலர்களை) பயன்படுத்த டிரம்ப் முடிவெடுத்தார்.

இதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த டெக்சாசில் உள்ள சமஷ்டி நீதிமன்றம், இராணுவ நிதியைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது. இந்த உத்தரவு டிரம்புக்கு பின்னடைவாக கருதப்படும் நிலையில், அதை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படும் என அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது



காலைக்கதிர் Kalaikathir



# அமெரிக்காவை ஒதுக்கும் வியூகம்

- ஹரிகரன் -



நவம்பர் 16ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், இலங்கையை மையப்படுத்தி இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தீவிரமான நகர்வுகளை முன்னெடுத்து வரும் நிலையில், மேற்குலகம் சற்று ஓரமாக ஒதுங்கியிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.

கோட்டாபய ராஜபக்‌ஷவைச் சந்திக்க இந்திய வெளிவிவகார அமைச்சர், பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் ஓடி வந்தனர். சீனாவில் இருந்தும் சிறப்பு பிரதிநிதி கொழும்பு வந்தார். ஆனால் அமெரிக்காவில் இருந்து இதுவரை எவரும் வரவில்லை.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும், புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுடனோ, அல்லது புதிய அரசாங்கத்துடனோ அதிகம் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளும் நகர்வுகளை முன்னெடுக்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷச்வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டதும், அன்று மாலையே அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்து வாழ்த்துக் கூறியிருந்தார் இந்திய தூதுவர்.

சீனத் தூதுவரும் மறுநாள் அவரைச் சந்தித்து வாழ்த்துக் கூறினார். ஆனால் அமெரிக்கத் தூதுவர் சமூக ஊடகங்களில் வாழ்த்துக் கூறியமையுடன் சரி.

கோட்டாபய ராஜபக்‌ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், நான்கு நாள்கள் கழித்தே, நவம்பர் 22ஆம் திகதிதான் அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ், அவரைச் சந்தித்து வாழ்த்துக் கூறியிருந்தார்.

அதுபோலவே ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களும் கோட்டாபய ராஜபக்‌ஷவைச் சந்திக்க ஆர்வம் காட்டவில்லை. காலம் தாழ்த்தியே சந்தித்து வருகின்றனர்.

இவற்றுக்கு அப்பால், ஆட்சி மாற்றத்தை அடுத்து பொறுப்பேற்கும் புதிய அரசாங்கத்துக்கு, நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வது வழக்கமான போதும், மேற்குலகத் தலைவர்களிடமிருந்து அவ்வாறான வாழ்த்துகள் வந்திருக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தென்னிலங்கையில் தீவிரமாகப் பரப்பப்பட்ட ஒரு விடயம் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும், அமெரிக்காவுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள், உறவுகள் இருந்தபோதும், அவரை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களில் அமெரிக்க எதிர்ப்பு யுக்தியும் ஒன்றாக இருந்தது.

2015 இல் மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இலங்கையில் சீனாவின் நகர்வுகளுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதில் அமெரிக்கா தீவிர ஈடுபாடு காட்டி வந்தது.

ஆனால், தற்போதைய ஆட்சி மாற்றம் அமெரிக்காவுக்குச் சாதகமான ஒன்றாக இருக்கவில்லை. அமெரிக்காவும் அவ்வாறு நோக்குவதாகத் தெரியவில்லை.

தற்போதைய அரசாங்கத்திடமிருந்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் விலகியே இருக்கிறது. இந்த விலகல் மேற்குலகினால் தீர்மானிக்கப்பட்டதா? தற்போதைய அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டதா என்பது தெரியவர வில்லை.

எனினும் தற்போதைய அரசாங்கம் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

சர்வதேச சக்திகளின் மோதல்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் நடுநிலை வகிப்பதே தமது நிலைப்பாடு என்றும், எல்லா நாடுகளுடனும் நட்புறவுடன் இருப்பதே தமது கொள்கை என்றும் கூறினாலும், அமெரிக்க விடயத்தில் கூடுதல் எச்சரிக்கையைத் தற்போதைய அரசாங்கம் கடைப்பிடிக்கிறது.

கோட்டாபய ராஜபக்‌ஷ பதவிக்கு வந்ததும், மனித உரிமைகளை மதிக்க வேண்டும், பொறுப்புக்கூறல், நீதி, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, வெளியிட்டிருந்த கருத்து, அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில், இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறவிருக்கிறது. முன்னைய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா என்பது குறித்த மதிப்பீடும் இடம்பெறவிருக்கிறது.

ஆனால், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின், 30/1 தீர்மானத்துக்கு முன்னைய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட இணை அனுசரணையை விலக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியிருக்கிறார்.

ஆக, மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நீதி போன்ற விடயங்களில் மேற்குலக விருப்பங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள முடியாது என்பதை இலங்கை அரசாங்கம் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறது.

நாட்டின் இறைமைக்கு ஆபத்தான எதையும் செய்யமாட்டோம் என்று தற்போதைய அரசாங்கம் கூறுகிறது.ஜெனீவாதீர்மான இணைஅனுசரணையை அல்லது அங்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை, நாட்டின் இறைமைக்கு எதிரானது என்று காட்டிக்கொள்ள முனைகிறது கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கம்.

ஏற்கனவே சிங்கள, பௌத்த வாக்குகளால் வெற்றிபெற்ற அவருக்கோ, அவரது தரப்பினருக்கோ, நாட்டின் இறைமை பற்றிய பீதியை ஏற்படுத்துவதன் மூலம், பெரும்பான்மை சிங்கள மக்களின் கவனத்தையும், ஆதரவையும் பெற்றுக் கொள்வது மிகச்சுலபம்.

மார்ச்மாதமளவில்நாடாளுமன்றம்கலைக்கப்படவுள்ள நிலையிலும், அதே மாதத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தொடர் நடக்கவுள்ள நிலையிலும், சிங்கள, பௌத்த பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளைக் கவருவதற்கு இதுபோன்ற பிரசாரங்கள் முக்கியமானவை.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல், நீதி, மனித உரிமைகள் போன்றனவற்றை முதன்மையான இலக்குகளாக கொண்டிருக்கவில்லை. இலங்கையில் தனது பூகோள அரசியல் நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு மூலோபாயமாகவே அவற்றைக் கையாண்டு வந்திருக்கிறது.

சீன ஆதிக்கத்தை உடைத்து, இலங்கை யைத் தமது பக்கம் இழுப்பதற்காகவே ஜெனீவாவை பயன்படுத்தி வந்தது அமெரிக்கா.

ஆனால் ஜெனீவா அழுத்தங்களுக்கு அடிபணியாத ஒரு அரசாங்கம் கொழும்பில் உருவாகியிருக்கின்ற நிலையில், சீனாவைக் கையாளுவதற்கான ஒரு யுக்தியையும், அமெரிக்க நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான யுக்தியையும் வகுத்துக் கொள்வதற்கான ஓர் அவகாசத்தை அமெரிக்கா தேடிக் கொண்டிருக்கிறது.

இந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டுதான், அமெரிக்காவையும் மேற்குலகத்தையும் வெட்டியாடுகின்ற யுக்தியைக் கையாள இலங்கை முனைகிறது.

கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக, இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில்தான் தற்போதைய அரசாங்கம் கவனம் செலுத்துவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருக்கிறார்.

இந்தியப் பயணத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ 'தி ஹிந்து'வுக்கு அளித்துள்ள செவ்வியில், இந்தியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை இலங்கையில் நேரடி முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு கருத்துக்களிலும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் மிகக் கவனமாக தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும்.

இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் அமெரிக்காவையோ, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையோ அழைக்கின்ற மனநிலையில் தற்போதைய அரசாங்கம் இல்லை.

அதற்கு முக்கியமானதொரு காரணம், அமெரிக்காவின் 480 மில்லியன் டொலர் மிலேனியம் சவால் நிறுவனக் கொடையை தற்போதைய அரசாங்கம் நிராகரித்திருக்கிறது.

ஆனால், இந்தியாவின் 450 மில்லியன் டொலர் கடனுதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ஒரு பக்கத்தில் அமெரிக்கா கொடையாக வழங்க முன்வந்த நிதியை நிராகரித்துக் கொண்டு, கிட்டத்தட்ட அதற்குச் சமமான அளவு கடனுதவியை இந்தியாவிடம் ஏற்றுக் கொண்டிருப்பதில் இருந்தே, கொழும்பின் வியூகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

சீனாவை தவிர்க்க முடியாத வணிகப் பங்காளி என்று அறிமுகப்படுத்தியிருக்கும் கோட்டாபய ராஜபக்‌ஷ அமெரிக்காவைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லை.

இதிலிருந்தே அமெரிக்காவைத் தூர விலக்கி வைக்கும் முடிவில் கொழும்பு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அவ்வாறு அமெரிக்காவையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் விலக்கி வைத்திருப்பதற்கு, இந்தியாவையும், ஜப்பானையும் பயன்டுத்திக் கொள்ள கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கம் முற்படுகிறது.

இந்தியாவை கைக்குள் போட்டுக் கொள்வதன்



மூலம், தனக்கான பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம் என்று நினைக்கிறது. இந்தியாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தாத வரையில், அதனுடன் இணக்கப் போக்கில் செயற்பட முடியும் என்பது அரசாங்கத்தின் கணக்கு.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தேவையற்ற தலையீடுகளைத் தடுக்கவும் தவிர்க்கவும் இந்தியாவையே பயன்படுத்தப் போகிறது ராஜபக்‌ஷ அரசாங்கம்.

குறிப்பாக , ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடரில் எதிர்கொள்ளவிருக்கும் நெருக்கடிகளை இந்தியாவையும், சீனாவையும் கொண்டு சமாளிக்கும் திட்டங்கள் அதனிடம் உள்ளன.

அமெரிக்காவும், இந்தியாவும், பொருளாதார, பாதுகாப்பு ரீதியாக மிகநெருக்கமான நிலைக்கு வந்து விட்டன. ஆனாலும், அண்டை நாட்டு விவகாரங்களில் இந்தியாவின் நலன்களைப் புறக்கணித்துச் செயற்படும் நிலையில் அமெரிக்கா இருக்குமா என்பது சந்தேகம்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுதான் அமெரிக்கப் பொறியை கடந்து செல்லும் முயற்சியில் இறங்கியிருக்கிறது கொழும்பு. இது எந்தளவுக்குக் கைகொடுக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். *

# சுவிஸ் தூதரகப் பணியாளரின் சட்டத்தரணிகளுக்கு மிரட்டல்



கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணிகளுக்கு, சமூக வலைத்தளங்களில் கடுமையான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபுல் குமாரப்பெரும மற்றும் சுதர்ன குணவர்தன ஆகிய சட்டத்தரணிகளுக்கு எதிராகவே சமூக வலைத்தளங்கள் மூலம் கடுமையான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

தாம் மேற்கொண்டு வருவது சமூகப் பொறுப்பு என்பதுடன் சட்டத்தரணி என்ற வகையில் தமது கடமை எனச் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்துள்ளார்.

உபுல் குமாரப்பெரும, மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர் என்பதுடன் கடந்த பொதுத் தேர்தலில் அவரது பெயர் அந்தக் கட்சியின் தேசிய பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

அத்துடன் மனித உரிமைச் செயற்பட்டாளரான சட்டத்தரணி சுதர்ன குணவர்தன, கடந்த அரசின் அரச செய்திப் பணிப்பாளராக கடமையாற்றியமையுடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் இருந்த நிறுவனத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். (ஐ)

# கொழும்பு வருகிறார் ஜப்பானிய அமைச்சர்

## கோட்டாவையும் சந்திப்பார்

கொழும்பு, டிசெ. 12

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ரொஷிமிட்சு மொடேகி இந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் தொடக்கம் 17ஆம் திகதி வரை, இலங்கை மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ரொஷிமிட்சு மொடேகி பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

முதலில் இலங்கை வரும் அவர் அடுத்து ஸ்பெயினுக்குச் செல்லவுள்ளார்.

இலங்கை வரும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், ரொஷிமிட்சு மொடேகி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கைக்குப் பொருளாதார அபிவிருத்தி



மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான பங்களிப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜப்பான் அறிவித்துள்ளது. (ஐ)

# வீதியில் மயங்கி முதியவர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணத்தில், கோவிலுக்குச் சென்ற முதியவர் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்தார். நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் ஆனைப்பந்திச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த முதியவர் நாவலர் வீதி, ஆனைப்பந்தி பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் பூபாலசிங்கம் (வயது – 64) என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

# இயக்குநர் களஞ்சியம் தாக்கப்பட்டாரா? இலங்கை இராணுவம் அடியோடு மறுப்பு

கொழும்பு, டிசெ. 12

இயக்குநர் களஞ்சியம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் முற்றிலும் மறுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து வந்திருந்த இயக்குநர் களஞ்சியம், இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில், நாடு திரும்பியுள்ளார் என இந்திய ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தன.

இயக்குநர் களஞ்சியம் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் முற்றிலும் மறுத்துள்ளது.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளரான பிரிகேடியர் சுமித் அத்தபத்து இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக இயக்குநர் மு.களஞ்சியம் இலங்கைக்கு வந்திருந்தார்.

அந்த நிகழ்வில் கலந்து விட்டு நாடு திரும்பும் வழியில் தான் இந்த கொடூரச் சம்பவத்துக்கு முகம்கொடுக்க நேரிட்டதாகவும், தற்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.



இது குறித்து இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்துவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று வினவிய போது, அந்த செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என மறுப்பு வெளியிட்டுள்ளார். (ஐ)

# ரயிலுடன் மோதுண்டவர் சிகிச்சை பயனின்றி சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

கோண்டாவிலில் ரயிலுடன் மோதுண்டு படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த தபால் ரயிலுடன் நபர் ஒருவர் கோண்டாவில் ரயில் நிலையத்துக்கு அருகில் மோதுண்டு விபத்துக் குள்ளாகியிருந்தார்.

விபத்துக்குள்ளானவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

உயிரிழந்த நபர் சுமார் 50 வயது மதிக்கத்தக்கவர். எனினும் அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்று கோப் பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை துறைமுகத்தில் ஜப்பானிய போர்க்கப்பல்

கொழும்பு, டிசெ. 12

ஜப்பானியக் கடற்படையின் ஹருசேம் என்ற போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக நேற்றுமுன்தினம் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

151 மீற்றர் நீளமும், 4550 தொன் எடையும் கொண்ட இந்த போர்க்கப்பல் 165 மாலுமிகளுடன் இலங்கை வந்துள்ளது.

மூன்று நாள்கள் இந்தப் போர்க்கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய போர்க்கப்பலின் கட்டளை அதிகாரி ஓஷிமா ரெரிஹிசா, இலங்கைக் கடற்படையின் கிழக்கு பிராந்திய கட்டளை அதிகாரி கொமடோர் சஞ்ஜீவ டயசுடன் பேச்சுக்களை நடத்தி



னார்.

இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக இலங்கைக் கடற்படை கூறியுள்ளது.

ஜப்பானிய போர்க்கப்பல் இன்று திருகோணமலையில் இருந்து புறப்படவுள்ளது. (ஐ)



# மெஸ்ஸிக்கு ஓய்வு



ஐரோப்பிய உதைபந்தாட்ட தொடர்களின் பிரபல மான யூரோ சாம்பியன்ஸ் லீக் போட்டியில் இன்டர் மிலான் அணியை எதிர்த்து விளையாடும் போட்டியில் லியோனல் மெஸ்சிக்கு, பார்சிலோனா அணி ஓய்வு வழங்கியுள்ளது

யூரோ சாம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட தொடரில் பார்சிலோனா 'எப்' பிரிவில் இடம் பிடித்துள்ளது. பார்சி லோனா ஏற்கனவே லீக் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி நொக் – அவுட் சுற்றுக்கு முன்னேறியுள் ளது.

இறுதி லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி இன்டர் மிலானை எதிர்கொள்கின்றது. இத்தாலியில் நடை பெறும் இந்த போட்டியில் மெஸ்சிக்கு ஓய்வு வழங்கப்பட் டுள்ளதாக பார்சிலோனா கழக நிர்வாகம் அறிவித்துள் ளது. மேலும், ஜெரார்ட் பிக்காய், செர்ஜி ரொபெர்ட்டோ ஆகியோருக்கும் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

லூயிஸ் சுவாரஸ், கிரிஸ்மான், அன்சு பட்டி ஆகி யோர் அணியில் தொடர்ந்து விளையாடவுள்ளார்கள். 'எப்' பிரிவில் பார்சிலோனா ஐந்து போட்டிகளில் விளை யாடி 3 வெற்றி, 2 சமநிலையுடன் 11 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளது.

இன்டர் மிலான், டாட்ர்மண்ட் அணிகள் தலா 7 புள்ளிகளை பெற்று அடுத்தடுத்த இடங்களை பிடித் துள்ளன.

# ரிஷப் பந்த் முற்றிலும் மாறுபட்ட ஒரு வீரர்



நட்சத்திர வீரர் எம்.எஸ். டோனிக்கு மாற்று வீரராக கருதப்பட்ட ரிஷப் பந்த் முற்றிலும் மாறுபட்டவர் என்று மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கட் ஜாம்பவான் பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரரான ரிஷப் பந்த், எம்.எஸ் டோனிக்கு மாற்று வீரராக கருதப்பட்டார். ஆனால் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்டத்தில் பின்தங்கி வருவ தால் விமர்சனம் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஆனால் அணி நிர்வாகம் அவருக்கு ஆதரவாகவே உள்ளது. இந்த நிலையில் ரிஷப் பந்த் முற்றிலும் மாறுபட்டவர் என்று பிரையன் லாரா குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து பிரையன் லாரா கூறுகையில் "ரிஷப் பந்த் மிகப்பெரிய அளவில் உற்சாகத்தை உருவாக்கி அணிக்கு வந்தவர். மிகவும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

எம்.எஸ் டோனிக்கு மாற்று வீரராக ஒருவர் விரைவில் கிடைப்பாரா? என்று சிலர் எதிர்பார்த்த நிலையில், ரிஷப் பந்த் அந்த இடத்தை நிரப்பினார். ஆனால், அவர் முற்றிலும் மாறுபட்ட வீரராகவே திகழ்கிறார்.

உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் 8 அல் லது 9 மாதங்களே உள்ள நிலையில், இது இக் கட்டான காலம் என்பது எனக்குத் தெரியும். இன்னொரு விக் கெட் காப்பாளரை வைத்துக் கொண்டு கூட இந் திய அணி போட்டிக்குச் செல்லலாம். ஆனால் ரிஷப் பந்த் மீதான அதிகப்படியான நெருக்கடி அவசிய மற்ற ஒன்றாகும்.

மிகவும் வெற்றிக்கரமான அணியாக திகழும் இந்தி யாவின் அணித் தலைவர் விராட் கோஹ்லி, ரிஷப் பந்த்துக்கு ஆதரவளிப்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

30 வருடத்திற்கு முந்தைய மேற்கிந்திய தீவுகள் அணியை நான் மீண்டும் திரும்பி பார்க்கிறேன். சில வீரர்கள் அணியில் சிறப்பாக செயல்படவில்லை. என்றாலும் அணியில் நீடித்தார்கள்.

ஏனென்றால், அணி சிறப்பாக விளையாடிக் கொண் டிருந்தது. மேற்கிந்திய தீவுகள் அணியில் தலை சிறந்த வீரர்கள் இருந்தார்கள். ஆனால், கஸ் லூகி அல்லது ஹார்ல் ஹூப்பர் பற்றி நீங்கள் அறிந் திருக்க மாட்டீர்கள்.

ஏனென்றால், அவர்கள் சிறப்பாக விளையாட வில்லை. ஆனால், அவர்கள் போட்டியில் முதிர்ச்சி காண அனுமதிக்கப்பட்டார்கள். அதேபோல், ரிஷப் பந்த்துக்கும் முதிர்ச்சி அடைய அனுமதிக்க வேண் டும்" – என்றார்.




# பங்களாதேஷ் பிரீமியர் லீக்; 'கொமில்லா வோரியர்ஸ்' தலைவராக தசுன் ஷானக

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் 'கொமில்லா வோரியர்ஸ்' அணியின் தலைவ ராக இலங்கைக் கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் தசுன் ஷானக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் ஐ.பி.எல். 'ருவென்ரி 20' கிரிக் கெட் தொடரைப் போல பங்களாதேஷ் கிரிக்கெட் சபையினால் பங்கபந்து பங்களாதேஷ் ப்ரீமியர் லீக் தொடர் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரு கின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நடை பெற்று வருகின்ற இந்தத் தொடரில் மொத்த மாக 7 அணிகள் பங்கேற்கின்றன.

2019 – 2020 ஆம் ஆண்டுக்கான பங்களா தேஷ் பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்களை கொள்வனவு செய்வதற்கான ஏலம் கடந்த நவம் பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் வெளிநாட்டு வீரர்களாக 33 வீரர்கள் ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்டனர். இவர்க ளில் இலங்கையைச் சேர்ந்த 6 வீரர்கள் கொள் வனவு செய்யப்பட்டனர்.

இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்ணான்டோ, மற்றுமொரு அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா, பானுக ராஜபக்ஷ, சகலதுறை வீரர்களான தசுன் ஷானக, திஸர பெரேரா மற்றும் ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் 4 அணிகளினால் கொள்வனவு செய்யப் பட்டனர்.

அவிஷ்க பெர்னான்டோ சட்டொக்ரம் செலஞ் சர்ஸ் அணியிலும், குசல் பெரேரா, பானுக ராஜ பக்ஷ மற்றும் தசுன் ஷானக ஆகியோர் கொமில்லா வோரியர்ஸ் அணியிலும், திஸர பெரேரா டாக்கா பிளாட்டுன் அணியிலும், ஜீவன் மெண் டிஸ் சில்லட் தண்டர்ஸ் அணியிலும் கொள் வனவு செய்யப்பட்டனர்.

இதில் கொமில்லா வோரியர்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த இலங்கை அணியின் சகல துறை வீரர் தசுன் ஷானக அவ்வணியின் தலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

28 வயதுடைய சகலதுறை வீரரான தசுன் ஷானக 2015 ஆம் ஆண்டு இலங்கை 'ருவெண்டி 20' அணியில் அறிமுகம் பெற்று 35 சர்வதேச 'ருவெண்டி 20' போட்டிகளில் விளையாடியுள் ளார்.

இறுதியாக இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளை யில் இலங்கை 'ருவெண்டி 20' அணியின் தலை வராக செயற்பட்ட தசுன் ஷானக, பாகிஸ்தான் அணியை 3 – 0 என்ற அடிப்படையில் வெள்ளை யடிப்பு செய்திருந்தார். மேலும் 80 'ருவென்ரி 20' போட்டிகளில் விளையாடிய அனுபவத்தை கொண்ட ஷானக, கழகங்களின் அணித்தலை வராகவும் செயற்பட்டுள்ளார்.

# விளையாட்டு போட்டியின் இடையே பிள்ளைக்கு பாலூட்டிய வீராங்கனை

இந்தியாவின் மிசோராம் மாநிலத்தில் விளையாட்டு போட்டியின் இடையே பிள் ளைக்கு பாலூட்டிய வீராங்கனையின் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

மிசோராமில் மாநில அளவிலான விளை யாட்டுப் போட்டிகளுக்கு துவக்க விழா நடைபெற்றுள்ளது. இதனையடுத்து கைப்பந் தாட்டம் நடந்துள்ளது.

இந்த கைப்பந்து போட்டியின் இடை வெளியிலேயே வீராங்கனை ஒருவர் தமது 7 மாத பிள்ளைக்கு பாலூட்டியுள்ளார்.

இந்தப் புகைப்படம் வெளியாகி பலரது பாராட்டையும் பெற்று வருகிறது. சிலர் அவரை அதிசய பெண்மணி என அழைத் துள்ளனர்.

பிள்ளை பிறந்து வெறும் 7 மாதங்களில் விளையாட்டுக்காகத் தம்மை தயார் படுத் திக் கொண்டு களத்திலும் சாதித்துள்ளமை அவரது அர்ப்பணிப்பைக் காட்டுவதாகப் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

சிலர், இவர்களை போன்ற தாய்மார் கள்தான் நாட்டுக்குப் பெருமை, இவர்களை ஆதரிப்பதில் பெருமை கொள்வோம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.



# காற்றாலை மின் நிலையப் பணி மறவன்புலோவில் மீள ஆரம்பம்

## உபகரணங்கள் யாழ்ப்பாணம் வந்தன

யாழ்ப்பாணம், டிசெ. 12

தென்மராட்சி மறவன்புலோவில் உள்ளூர் மக்களின் எதிர்ப்பால் இடை நிறுத்தப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனஅறிய முடிகிறது.

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து 10 மெகாவோட்ஸ் மின்சாரத் தைக் காற்றாலை ஊடாக உற்பத்தி செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன் றுடன் அரசு உடன்படிக்கை செய்திருந்தது.

அதன்படி மறவன்புலோவில் காற்றாலை மின் உற்பத்தி அமைக்கு பணிகள் கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் உள்ளூர் மக்கள் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையால் அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் புதிய அரசு ஆட்சிக்கு வந்த நிலையில் இந்திய திட்டங்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் ஒன்றாக மறவன்புலோவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்தியாவின் பிரபல போக்குவரத்து நிறுவனமான நாமக்கல் போக்குவரத்து கம்பனியின் துணை நிறுவனமான என்.ரி.சி. லொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தால் காற்றாலை அமைப்பதற்கான உபகரணங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.



இதேவேளை, மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதியில் இந்தக் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு உள்ளூர் மக்கள் கடும் எதிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அதனால் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் தலையீடு செய்ததால் காற்றாலை அமைக்கும் பணிகள் கடந்த 4 மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 07)

# யாழ்ப்பாணத் தமிழ் அகராதி யாழ். பல்கலையில் வெளியீடு





யாழ்ப்பாணம், டிசெ. 12

நடராசா சிறிரஞ்சனின் யாழ்ப்பாணத் தமிழ் அகராதி, யாழ்ப்பாண வழக்குச்சொல் அகராதி தொகுதி 1 ஆகிய இரண்டு நூல்கள் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலத்துறை பேராசிரியர் சுப தினி ரமேஸ் தலைமையில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக வேந்தரும் பேராதனைப் பல் கலைக்கழக தகைசார் பேராசிரியருமான கலாநிதி சி.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக இந்தியாவின் தமிழ்நாடு பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் பெ.மாதையன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன்போது ஆசியுரையை ஓய்வுநிலைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் ஏ.என்.கிருஸ்ணவேணி ஆகியோர் ஆற்றினர்.

அகராதிகளின் முதற் பிரதியை தமிழ் நாடு பேராசிரியர் மாதையன் வெளியிட்டு வைக்க பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் சுசீந்திரராஜா கிரிதரன் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளை பேராயர் மற்றும் வேந்தர் உள்ளிட்டவர்கள் வழங்கி னர். (ஐ - 07)

# 10 கிலோ கிராம் தங்கத்துடன் நால்வர் பொலிஸாரால் கைது

கொழும்பு, டிசெ. 12

புத்தளம் – கல்பிட்டி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குடாவ கடற்பகுதியில் 10 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள் ளனர் எனவும் கல்பிட்டி பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோத மாகப் படகு மூலம் தங்கம் கடத்தப்பட் டுள்ளதாகவும், 9 கோடி ரூபா பெறுமதி யான தங்கம் சந்தேகநபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடத்தல் மிக நீண்ட காலமாக இடம்பெற்று வந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் கந்தக்குளி மற்றும் கல்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந் தேகநபர்களைக் கைப்பற்றப்பட்ட தங்கம் உள்ளிட்ட பொருள்களுடன் புத்தளம் நீதி வான் முன்னிலையில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலி ஸார் மேலும் கூறினர். (ஐ)



காலைக்கதிர்
Kalaikathir



# ஜனாதிபதி செயலகம் நோக்கி யாழிலிலிருந்து நடைபயணம்








யாழ்ப்பாணம், டிசெ. 12

சமாதானத்தின் வேர்கள் ஆழ ஊடுருவட்டும் எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு ஜனாதிபதி அலுவலகம் வரையான நடைபயணம் ஆரம்பமானது.

மாதகலில் இந்த நடை பயணம் நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமானது.

வி.சகாதேவன் என்பவர் மாதகல் சங்கமித்தா விகாரையில் இருந்து தனது தாயின் ஆசிர்வாதத்தோடு நடைபயணத்தை ஆரம்பித்தார்.

ஒரு சமாதானச் செய்தியைச் சிங்கள மக்களுக்கும் நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் வலியுறுத்தும் வகையில் இந்த நடைபயணத்தைத் தாம் ஆரம்பித்துள்ளார் என சகாதேவன் தெரிவித்தார். (ஐ - 07)

# பாதுகாப்புச் செயலர் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 12

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று அறியமுடிகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு நடைமுறைகள் தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் இன்று முற்பகல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு வடக்கு மாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவானதையடுத்து பாதுகாப்புச் செயலராக, முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டார்.



பாதுகாப்புச் செயலராகப் பதவியேற்ற பின்னர் முதன்முறையாக அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (ஐ)

# பாரதியாரின் ஜனன தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், டிசெ. 12

மகாகவி பாரதியாரின் 133ஆவது ஜனன தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் நல்லூரிலுள்ள பாரதியார் சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அத்தோடு பாரதியார் பாடலும் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் கே.பாலச்சந்திரன், யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# வயோதிபப் பெண் சித்திரவதையின் பின்னர் கொலை; சந்தேகநபர்கள் இருவரின் குருதி மாதிரிகள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

கோண்டாவிலில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண்ணைச் சித்திரவதையின் பின் கொடூரமாகக் கழுத்தறுத்துக் கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரது குருதி மாதிரிகளும் நேற்று எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உத்தரவில் சந்தேகநபர்கள் இருவரையும் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் கோப்பாய் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை முற்படுத்தினர். அதன்போது சந்தேகநபர்களின் குருதி மாதிரிகள் பெறப்பட்டன.

இருபாலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர்கள் இருவர் மீதே கோண்டாவிலில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண்ணைக் கொலைக் குற்றச்சாட்டையும் கோப்பாய் பொலிஸார் முன்வைத்தனர்.

அது தொடர்பில் வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட குருதி மாதிரிகளுடன் சந்தேகநபர்களின் குருதி மாதிரியையும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த மாதம் 25ஆம் திகதி விண்ணப்பம் செய்திருந்தனர்.

எனினும் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தான் அவர்களைச் சட்ட மருத்துவ அதிகாரியின் முன் முற்படுத்த முடியும் என்பதால் இரண்டு வாரங்கள் இந்தப் பணி தள்ளிப்போடப்பட்டது.

இந்த நிலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று முன் தினம் நீதிமன்றில் வைத்து பாதிக்கப்பட்ட சிறுமி உட்பட்ட சாட்சிகள் இருவரும் அடையாளம் காட்டினர்.

அதனால் வயோதிபப் பெண்ணின் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டு அவர்களது குருதி மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

உரும்பிராயைச் சேர்ந்த சிவலிங்கம் விஜிதரன் அல்லது குட்டி (இவரது மற்றொரு முகவரி கிளாலி வீதி, எழுதுமட்டுவாழ்), இருபாலையைச் சேர்ந்த சற்குணம் ஜெம்சன் ஆகிய இருவரின் குருதி மாதிரிகளே இவ்வாறு பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளன.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். கடந்த ஒக்ரோபர் 21ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான புண்ணியானந்தம் சந்திராதேவி (வயது -61) என்ற வயோதிபப் பெண்ணே வெட்டுக் காயங்களுடன் வீட்டு முற்றத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பிள்ளைகளில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளமையுடன் மற்றையவர் ஆசிரியர் என்றும், நீர்வேலியில் வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபப் பெண் சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் இருந்து கூரிய ஆயுதத்தையும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் மீட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கொடூர குணமுடையவர்களே இந்தக் கொலையை செய்துள்ளனர் என்றும் வயோதிபப் பெண்ணை இழுத்து வந்து உடையை அகற்றி, வயிற்றுப் பகுதியில் நெருப்புத் தணல் உடைய கட்டையால் சூடு வைத்துப் பெரும் சித்திரவதை செய்துள்ளனர் என்றும் நீதி விசாரணைகளில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

வயோதிபப் பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்புகள் என்பனவும் கொள்ளையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ - 07)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2019 இல் வெளியிடப்பெற்றது.